**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கூறு II - 2021**

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் கூறு ஐஐ இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 52 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் விநியோக இணைப்புக் குறிகாட்டிகளை (னுடுஐ) கையகப்படுத்துவது குறித்த மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் அறிக்கை 28 பெப்ரவரி 2022 இற்கு முன்னர் உலக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 30 யூன் 2022 வரை 2021 ஆம் ஆண்டிற்கான சுயாதீன மற்றும் கல்வி நிபுணர்களைக் கொண்ட மூன்றாம் தரப்பு சுயாதீன அமைப்பு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் (வீஏ) அந்தந்த நிதியாண்டிற்கான விநியோக இணைப்புக் குறிகாட்டிகளின் (னுடுஐள) சாதனையை அளவிடுவதற்காகச் செய்யப்படுகின்றது. இருந்த போதிலும் வீஏ அறிக்கையை உலக வங்கியிடம் சமர்ப்பித்த பின்னர் கல்வி அமைச்சினால் 2020 னுடுஐ களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அதற்குரிய ஆண்டில் (2021) மீளப் பெறுவதற்கு முடியமாக இருந்தது. | திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் உள்ள விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் திட்டச் செயற்பாட்டு கைநூலின் 5.1 ஆம் பிரிவு | திட்ட வழிநடாத்தல் குழு இரண்டு மாதங்களுக்குகொரு தடவையாவது கூட்டப்படல் வேண்டும். இருந்த போதிலும் மீளாய்வாண்டில் ஒரே ஒரு வழிநடாத்தல் குழு மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறிப்பு விதிமுறைகளில் (வுழுசு) திட்டமிட்டபடி தேசிய அளவிலான வழி நடாத்தல் குழுவை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் எடுக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் செயற்பாட்டு கைநூலின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 96 ஆம் பந்தி | உள்ளகக் கணக்காய்வு தேவைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கூறு | செயற்பாடு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| II | சாதாரண தர பரீட்சை நிலையங்களை தயார் செய்தல். | 100 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | கொவிட் - 19 இற்கான ஏற்பாடுகள் கூறு 1 இன் விநியோக இணைப்புக் குறிகாட்டி 09 (னுடுஜ 09) இன் கீழ் செய்யப்பட்டிருந்ததுடன் மாகாணக் கல்வி திணைக்களங்களுக்கு ரூபா 13.4 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி நிதி தொடர்பாக போதுமானளவு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை. | மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி நிதி தொடர்பாக பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை. |

**முகாமைத்துவத்தின் பதில்** கல்வி அமைச்சு ஏற்கனவே பல தடவைகள் முன்னேற்றத்தைச் சமர்ப்பிக்குமாறு மாகாண திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளது. எனினும், எதிர்காலத்தில் இந்நடவடிக்கைகள் தொடர்பாக முன்னேற்றத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை கல்வி அமைச்சினால் எடுக்கப்படும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** பயன்படுத்தப்பட்ட நிதிகள் தொடர்பான சான்றுகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 4 மில்லியனாக இருந்தது. திட்டமானது முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் என்பவற்றை பராமரிக்காதபடியால் அத்தகைய நிலுவைகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருவதுடன் பொதுக் கணக்காய்வுப் பிரிவிற்கு ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அட்டவணைகள் முறையாகப் பராமரிக்கப்படல் வேண்டும். |